36. கால வரிசைப்படுத்து

அ) உலோக பணம் ஆ) நிகர் பணம் இ) பண்டப் பணம்

ஈ) காகித பணம் உ) வங்கிப் பணம்

1. இ, ஆ, உ, அ, ஈ
2. அ, ஆ, இ, ஈ, உ
3. உ, ஆ, அ, இ, ஈ
4. இ, அ, ஈ, உ, ஆ

37. கூற்று: தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகங்கள் உலோக பணமாகப் பயன்படுத்தப்பட்டன.

காரணம்: அவைகள் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிப்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருந்தன.

1. கூற்று சரி காரணம் தவறு
2. கூற்று தவறு காரணம் சரி
3. கூற்றுக்கு காரணம் சரியான பொருத்தமில்லை
4. கூற்று சரி காரணம் பொருத்தமே

38. இந்திய ரூபாய் (₹) குறியீட்டினை வடிவமைத்தவர் யார்?

1. உதயகுமார்
2. அமர்த்தியாசென்
3. அபிஜித் பானர்ஜி
4. இவர்களில் எவருமில்லை

39. பணத்தின் மதிப்பு ______.

1. அக மதிப்பு 2. புற மதிப்பு 3. 1 மற்றும் 2 4. எதுவும் இல்லை

40. வங்கிப் பணம் என்பது எது?

1. காசோலை
2. வரைவு
3. கடன் மற்றும் பற்று அட்டைகள்
4. மேற்கூறிய அனைத்தும்

41. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

LIVEWORKSHEETS

முதலீட்டுக் கருவிகள் என்பவை

1. பங்கு வர்த்தகம்
2. பத்திரங்கள்
3. பரஸ்பர நிதி
4. வரி செலுத்துவது

42. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்குக் காரணமானவர்கள் ______.

1. வரி ஏய்ப்பவர்கள்
2. பதுக்குபவர்கள்
3. கடத்தல்காரர்கள்
4. இவர்கள் அனைவரும்

43. நிகழ்நிலை வங்கியை ______ என்று அழைக்கலாம்.

1. மின்னணு வங்கி
2. இணைய வங்கி
3. இவ்விரண்டும்
4. எதுவுமில்லை

44. மின்னணு வங்கியை ______ என்று அழைக்கலாம்.

1. தேசிய மின்னணு நிதி பரிமாற்றம்
2. நிகழ்நிலை வங்கி
3. RTGS
4. IMPS

45. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ______ பணமாகும்.

1. உலோகப் பணம் 2. நெகிழிப் பணம் 3. மின் பணம் 4. காகிதப் பணம்

46. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ______.

1. கி.பி.1717 2. கி.பி.1600 3. கி.பி.1935 4. கி.பி.2016

47. தவறான ஒன்றைக் கண்டுபிடிக்க

பரிமாற்றத்திற்கு பணத்தின் சமிபத்திய வடிவங்கள்

1. பற்று அட்டை
2. பண்டமாற்று முறை
3. கடன் அட்டை
4. நிகழ்நிலை வங்கி

48. பொருத்துக.

அ) பண்டமாற்று முறை - i).வரி ஏமாற்றுபவர்கள்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம்- ii) மின்னணு பணம்

LIVEWORKSHEETS

இ) மின் பணம் - iii) நுகர்வு தவிர்த்த வருமானம்

ஈ) சேமிப்பு - iv) பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம்

உ) கருப்புப் பணம் - v) 1935

1. அ-I, ஆ-ii, இ-iii, ஈ-iv, உ-v
2. அ-iv, ஆ-ii, இ-I, ஈ-v, உ-iii
3. அ-iv, ஆ-iii, இ-ii, ஈ-v, உ-i
4. அ-iv, ஆ-v, இ-ii, ஈ-iii, உ-i

49. இந்தியாவில் ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவது யார்?

1. நிதி அமைச்சகம்
2. ரிசர்வ் வங்கி
3. அரசு அனுமதி பெற்ற அச்சகம்
4. மத்திய கூட்டுறவு வங்கி

50. தவறான ஒன்றினைக் கண்டுபிடி

பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள்

1. இரட்டை பொருளாதாரம்
2. சமத்துவம் வலுவிழத்தல்
3. உற்பத்தியில் விளைவுகள் இல்லை
4. ஆடம்பர நுகர்வுச் செலவு

51. தவறான இணையைக் கண்டறிக.

1. பண்டப் பணம் - ஆயுதங்கள்
2. உலோகப் பணம் - தாமிரம்
3. காகிதப் பணம் - பொற்கொல்லர் ரசீது
4. நிகர் பணம் - பரஸ்பர நிதி

52. பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் எவ்வகையான பணம் முக்கிய பங்கு வகித்தது?

1. உலோகப் பணம்
2. பண்டப் பணம்
3. நிகர் பணம்
4. காகிதப் பணம்

53. அமெரிக்க நாட்டின் நாணயத்தின் பெயர் ______.

1. ரூபாய்
2. யென்
3. டாலர்
4. பவுண்ட்

54. குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

LIVEWORKSHEETS

1. கருவூல பட்டியல்
2. கடன் பத்திரங்கள்
3. காப்பீடு
4. உண்டியல்

55. பங்கு வர்த்தகம், பத்திரங்கள், பரஸ்பர நிதி, காப்பீடு அடங்கிய குழுவிற்குப் பெயரிடுக.

1. சேமிப்பு
2. முதலீடு
3. நிகர் பணம்
4. பணத்தின் சமீபத்திய வடிவங்கள்

56. நாணயங்கள் அடிப்படையில் குழுவில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

1. இந்தியா
2. சிங்கப்பூர்
3. பாகிஸ்தான்
4. ஸ்ரீலங்கா

57. வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னணு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப் படுவது

1. மின்னணு பணம்
2. இணைய வங்கி
3. நிகழ்நிலை வங்கி
4. மின் வங்கி

58. பணப் பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலை _______.

1. காகிதப் பணம்
2. பண்டப் பணம்
3. நிகர் பணம்
4. வங்கிப் பணம்

59. NEFT என்பது _______.

1. National Education Fundamental Training
2. National Eco Forest Type
3. National Empowerment of Foreign Treaty
4. National Electronic Fund Transfer

60. பின்வருவனவற்றில் தவறான கூற்று எது?

1. காகித பணமும் கடன் பணமும் ஒரே நேரத்தில் வளர்ந்தன.
2. பணத்தின் புற மதிப்பு என்பது வெளி மாநிலத்தில் உள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியைக் குறிக்கும்.
3. பணத்தின் மதிப்பும் விலையின் அளவும் எதிர்விகிதத் தொடர்புடையது.

LIVEWORKSHEETS

4. 'பணமாகப் பிரகடனம் செய்யப் படும் எவையும் பணமாகும்' என சில வல்லுநர்கள் பணத்தைச் சட்டபூர்வமான சொற்களால் வரையறுத்துள்ளனர்.

61. பணத்தின் மதிப்பு என்பது ______.

1. பொருட்களை விற்கும் போது கிடைக்கும் லாபத்தைக் குறிக்கும்.

2. பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியைக் குறிக்கும்.

3. மேற்கண்ட இரண்டும்.

4. இவை எதுவுமில்லை.

62. உள்நாட்டில் உள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தியைக் குறிப்பது

1. பணத்தின் புற மதிப்பு

2. பணத்தின் அக மதிப்பு

3. கடன் பணம் (அ) வங்கிப் பணம்

4. இவற்றில் எதுவும் இல்லை

63. 'எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே பணம்' எனக் கூறியவர் யார்?

1. பேராசிரியர் வாக்கர்

2. ஸ்டோவ்ஸ்கி

3. சர் ஜான் ஹிக்ஸ்

4. ராபர்ட்சன்

64. பொருத்துக.

அ) மாணவர் சேமிப்புக் கணக்கு - i). வியாபாரிகள்

ஆ) சேமிப்பு வைப்பு - ii). பூஜ்ய இருப்பு

இ) நடப்பு கணக்கு வைப்பு - iii). நிலையான வருவாய்

ஈ) நிரந்தர வைப்பு - iv). பெயரளவு வட்டி

1. அ - iv ஆ - iii இ - i ஈ - ii

2. அ - ii ஆ - iv இ - iii ஈ - i

3. அ - ii ஆ - iv இ - i ஈ - iii

4. அ - iv ஆ - i இ - ii ஈ - iii

65. கூற்று: ஸ்டோவ்ஸ்கியின் கருத்துப்படி "பணம் என்பது ஒரு கடினமான கருத்தாகும்.

காரணம் 1: ஏனெனில் பணத்தின் வரையறைகள் அதனுடைய செயல்பாட்டைப் பொறுத்தே வரையறுக்கப்பட்டுள்ளது.

LIVEWORKSHEETS

காரணம் 2: ஏனெனில் அது வேறுபட்ட துறைகளில் மூன்று பணிகளைக் குறிப்பிடுகிறது.

1. கூற்று மற்றும் காரணங்கள் சரி
2. கூற்றுக்கு காரணம்1 மட்டுமே பொருத்தமானது காரணம் 2 பொருத்தமில்லை
3. கூற்றுக்கு காரணம் 2 மட்டுமே சரியாக விளக்குகிறது.
4. கூற்று தவறு

66. கீழ்க்கண்டவற்றுள் ஒரே குழுவில் அடங்குவன எவை?

அ) மதிப்பின் நிலைகலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்

ஆ) மதிப்பின் அளவுகோல்

இ) மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி

ஈ) எதிர்கால செலுத்துகைக்கான நிலைமதிப்பு

உ) பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை

1. அ, இ, ஈ    2. ஆ, உ, இ    3. அ, ஆ, உ    4. ஆ, ஈ

67. ஸ்டோவ்ஸ்கியின் கருத்துப்படி பணத்தின் பணிகள் _______.

அ) மாற்று மதிப்பு    ஆ) கணக்கீட்டின் அலகு

இ) மதிப்பின் அளவுகோல்    ஈ) மதிப்பின் நிலைகலன்

1. அ, ஆ, இ    2. அ, இ, ஈ

3. ஆ, இ, ஈ    4. அ, ஆ, ஈ

68. சர்.ஜான் என்பாரின் பணம் பற்றிய கூற்று கீழ்க்கண்டவற்றுள் எது?

1. எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம்
2. பணம் அதன் பணிகளால் வரையறுக்கப் படுகிறது. எவையெல்லாம் பணமாகக் கருதப்படுகிறதோ அவை பணமாகப் பயன்படுத்தப்படுகிறது.
3. பணமாகப் பிரகடனம் செய்யப்படும் எவையும் பணமாகும்.

LIVEWORKSHEETS

4. பொது ஏற்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எதையும் பணமாகக் கருதலாம்.

69. பணத்தின் பணிகள் எத்தனை பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன?

1. 2　　2. 3　　3. 4　　4. 10

70. கீழ்க்கண்டவற்றுள் பணத்தின் பணிகள் அல்லாதவை எது?

அ) பண்டம் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆ) அனைத்து வகையான பண்டங்கள் மற்றும் பணிகள் மதிப்பையும் பணத்தால் அளவிடலாம்.

இ) எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

ஈ) எதிர்காலத்திற்காகச் சேமிக்க முடியும்.

உ) தொலைதூர இடங்களுக்கும் பண்டங்களைப் பரிமாற்றம் செய்ய முடியும்.

1. ஈ மட்டும்　　2. ஈ மற்றும் உ

3. ஆ மட்டும்　　4. இவற்றில் எதுவுமில்லை

LIVEWORKSHEETS